2013 ஏப்ரல் 22]

'அது எங்களுடைய துறைக்குச் சம்பந்தப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் பல்வேறு நல்ல பல திட்டங்களை அந்த இடத்தில் கொண்டுவருவதற்காக நாங்கள் மனு செய்திருக்கிறோம்' என்று கூறிவிட்டார். எனவே, அதிலே தலையிடுவதற்கு வாய்ப்பு இல்லை என்றே நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 285, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

285—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***11733—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளத்தில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது தமிழ்நாட்டில் 30 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும்–பாலிடெக்னிக் கல்லூரிகளும், 34 அரசு உதவிபெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும், 304 சுய நிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும், Film Technology Labour Studies, Hotel Management போன்ற படிப்புகளுக்கான 20 இதர கல்லூரிகளும், ஆக மொத்தம் 478 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்–பாலிடெக்னிக் கல்லூரிகள் நடைபெற்று வருகின்றன.

முற்பகல் 10–35

இதிலே சென்ற ஆண்டு 10 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும், இந்த ஆண்டு ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியும் தொடங்கப்பட்டு, ஆக தமிழ்நாட்டில் 478 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

(மேசையைத் தட்டும் ஒலி) சொல்லப்போனால், இந்தியத் திருநாட்டில் அதிகமான பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளைக் கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு தான் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், திருப்பூர் மாவட்டத்தில் மொத்தம் 8 சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. அங்கே மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக, அனுமதிக்கப்பட்ட மாணவர் சேர்க்கை எண்ணிக்கை 2,880. இந்த ஆண்டு மாணவர் சேர்க்கை எண்ணிக்கை 1,824. காலியாக உள்ள இடங்கள் 1,056.

ஆகவே, திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்தில் போதிய அளவு தொழில்நுட்பக் கல்லூரிகளும், அரசு உதவி பெறும் கல்லூரிகளும் இருப்பதாகவும், காலியிடங்கள் இருப்பதாகவும் கூறினார்கள். என்னைப் பொறுத்தவரையிலே, திருப்பூர் மாவட்டத்திலே மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி என்பது புதிதாக உருவாக்கப்பட்ட தொகுதி. அந்தத் தொகுதி புதிய வட்டமாகவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகுதியிலே ஆயிரத்திற்கும் மேற்பட்ட மின்சார காற்றாடிகள் இருக்கின்றன. 10–க்கும் மேற்பட்ட காகித ஆலைகள் உள்ளன. தென்னை நார் உற்பத்தி செய்யக்கூடிய ஆலைகளும் உள்ளன. இதுபோன்ற சூழ்நிலைகள் இருப்பதால், தொழில் முனைவோர்கள், பயிற்சி பெற்றவர்கள் அதிகமாகத் தேவைப்படுகிறார்கள். அந்தத் தொகுதி நகரப் பகுதி அல்லாதது, 5 பேரூராட்சிகளை மட்டும் உள்ளடக்கிய ஒரு

2013 ஏப்ரல் 22]

கிராமத்தின் உட்சார்ந்த பகுதியாக உள்ளது. அங்கு ஏழை, எளிய மக்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மக்கள், ஆதி திராவிடர் மக்களெல்லாம் வசித்து வருகிறார்கள். 40–க்கும் மேற்பட்ட அரசு உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. 30,000 குழந்தைகளுக்கு மேல் அங்கு படித்து வருகிறார்கள். ஆகவே, அந்த இடத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, அங்குள்ள குழந்தைகள் நலனைக் கருத்திற்கொண்டு, அங்கு அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மின் தேவையைக் கருத்திற்கொண்டு, காற்றாடி மூலமாக மின்சாரம் தயாரிப்பதற்குப் பாடப் பிரிவுகள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். திருப்பூர் மாவட்டத்தில், மடத்துக்குளம் தொகுதி புதிதாக உருவாக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதி. அந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய பல்வேறு விதமான தொழில் முனைவோர்களை மேம்படுத்துவதற்கென அங்கே பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் முதன்முதலாக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ‘தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம்’ ஒன்றினை ரூ.20 இலட்சம் செலவில் அமைப்பதற்கு ஆணை வழங்கி, இந்தியாவில் எந்த ஒரு பல்கலைக்கழகத்திலும் இல்லாத அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முதலாக தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 10 பல்கலைக்கழகங்களுக்கு தலா ரூ.20 இலட்சம் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

சென்னையில் இருக்கக்கூடிய அண்ணா பல்கலைக்கழகத்தில் I.T.I. படித்தவர்கள், Polytechnic படித்தவர்கள், பொறியியல் படித்தவர்கள் சூரிய மின் சக்தி கொண்டு தொழில்நுட்பப் பாடப் பிரிவுகள் துவங்குவதாக அந்தத் தொழில் முனைவோர் மேம்பாட்டு

[2013 ஏப்ரல் 22

மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. Photovoltaic Solar Electric System என்று சொல்லப்படுகிற, சிறிய அளவிலான Photovoltaic Solar பொருட்கள் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு பயிற்சித் திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. ஆகவே, அந்தத் திட்டங்களில், பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் I.T.I. படித்தவர்கள், Polytechnic படித்தவர்கள், பொறியியல் படித்தவர்கள் சேர்ந்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெளியிட்டிருக்கிற Solar Policy, அதாவது, தனியார் நிறுவனங்களிலும், அரசுக் கட்டடங்களிலும், கல்லூரிகளிலும்கூட அந்த Solar Policy–யின்படி, 3,000 மெகா வாட் மின்சாரத்தை அவர்களே சூரிய ஒளியைப் பயன்படுத்தித் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்று Solar Policy வைத்திருக்கிறார்கள். அதனை ஊக்கப்படுத்துவதற்காகத்தான் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையத்தில் இதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதி வாரியாக பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்று கேட்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 478 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. இந்தியாவில் தமிழகத்தில்தான் அதிகமான பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. மாணவர்களின் சேர்க்கைக்காக போதுமான காலி இடங்கள் நிறைய இருக்கின்றன. கடந்த ஆண்டும் 10 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். ஆகவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க வேண்டுமென்று சொன்னால், அனைத்து மாணவர்களும் பயன்பெறுகிற வகையில், கட்டணச் சலுகையில் சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலத்தில் அதுபோன்று பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் தேவை ஏற்பட்டால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

தமிழ்நாட்டில் 450—க்கும் மேற்பட்ட பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் உள்ளன என்று கூறினார்கள். கோவை மாவட்டத்திலுள்ள உடுமலைப்பேட்டை வட்டம் மற்றும் மடத்துக்குளம் வட்டம் ஆகிய இரண்டு பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இல்லையென்பதால், நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எங்கள் பகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம் என்பது கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களின் பக்கத்தில் இருக்கிறது. திருப்பூர் மாவட்டத்தில் 8 சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. அரசு உதவிபெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 6 இருக்கின்றன. சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 19 இருக்கின்றன. திருப்பூர் மாவட்டத்தின் பக்கத்தில் இருக்கக்கூடிய கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2 அரசுக் கல்லூரிகள் இருக்கின்றன. 6 அரசு உதவி பெறும் கல்லூரிகளைச் சேர்த்து மொத்தம் 27 கல்லூரிகள் இருக்கின்றன. அங்கேகூட 3,138 மாணவர்கள் சேர்க்கைக்கு இடங்கள் காலியாக இருக்கின்றன. அதோடுமட்டுமல்ல, பக்கத்திலுள்ள ஈரோடு மாவட்டத்தில் அரசு உதவி பெறும்

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இரண்டு இருக்கின்றன. சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 13 இருக்கின்றன. அங்கேயும் 15 கல்லூரிகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கலாம், சுயநிதிக் கல்லூரிகளில் கட்டணம் அதிகம் என்பதால்கூட இந்தக் கோரிக்கையைக் கேட்கலாம், அப்படியல்ல. பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் அந்தந்தக் கல்லூரிகளில் விண்ணப்பம் பெறப்பட்டு, மாணவர்கள் சேர்க்கை பரிசீலனை செய்யப்பட்டு 50 சதவிகிதம் அரசு ஒதுக்கீடாகக் கொடுக்கிறார்கள். அந்த 50 சதவிகித அரசு இட ஒதுக்கீட்டில் ஏற்கெனவே இடங்கள் காலியாக இருக்கின்றன. எனவே, தமிழ்நாட்டில் போதுமான பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய பகுதிக்கு ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்று அடிக்கடி வலியுறுத்துகிற காரணத்தால், எதிர்காலத்தில் இதைப்பற்றி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியில் மகத்தான சாதனைகளைப் புரிந்து வருகிற நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், என்னுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியில், கிட்டத்தட்ட 60 ஆண்டுக்காலம் கல்லூரியே இல்லாத அந்தச் சூழ்நிலையில், 2011 ஆம் ஆண்டு எங்களுடைய மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டியிலும், நன்னிலத்திலும் இரண்டு கல்லூரிகளைத் தந்தார்கள். ஆகவே, அந்தவகையில் திருத்துறைப்பூண்டியில் ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கல்லூரியில் இருபாலரும் சேர்ந்து படிக்கின்ற கல்லூரியாக இருந்தாலும்கூட, 118 மாணவர்களும், 575 மாணவியர்களும் படிக்கிறார்கள். அப்படியும் படிக்கின்ற மாணவர்களின் ஆர்வத்தின் காரணமாக, தொலைதூரக் கல்வியில் 136 மாணவர்கள் படிக்கிறார்கள். ஆகவே, அந்தவகையிலே சிறப்பு வாய்ந்த அந்தக் கல்லூரியில் இட வசதி கிடையாது, கட்டடம் கிடையாது. பழைய மருத்துவமனையில்

2013 ஏப்ரல் 22]

இயங்கி வருகிறது. இரண்டாம் ஆண்டு மாணவர்கள் படிப்பதால், இட நெருக்கடி காரணமாக 5 வகுப்புகள் நடத்தக்கூடிய அளவில் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்டு வகுப்பறைகள் கட்டப்பட்டன. இருந்தாலும், இன்றைக்கு இருக்கக்கூடிய வெப்பத்தின் காரணமாக, மாணவ, மாணவியர்கள் அந்த இடத்தில் உட்கார்ந்து படிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அந்தக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று, மூன்றாவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பின்பு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் 11 கலை மற்றும் அறிவியல் உறுப்புக் கல்லூரிகளைத் தொடங்கினார்கள். அதிலே எந்தெந்த மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்கள், எந்தெந்த மாவட்டங்களில் ஏழையெளிய மாணவர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிடச் சொல்லி, எந்தெந்த மாவட்டங்களில் இதுபோன்ற கல்வி நிலையங்கள் இல்லையோ, அதுபோன்ற மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து அறிவித்தார்கள். அதன் அடிப்படையிலேதான் தங்களுடைய தொகுதிக்கும் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொடுத்து உங்கள் மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். பொதுவாக கல்லூரிகள் ஆரம்பிக்கின்றபோது, உடனடியாக நாம் கட்டடம் கட்டிக் கொடுக்க முடியவில்லை. அதிலே இடங்களைத் தேர்வு செய்வதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன.

முற்பகல் 10—45

அதோடு மட்டுமல்லாமல்; இப்பொழுது தற்காலிகமாக பாதுகாப்பான ஓர் இடத்தைத் தேர்வு செய்து நாம் கல்லூரியைத் தொடங்கியிருக்கிறோம். இப்பொழுது இடம் தேர்வு செய்கிற பணி நடைபெற்று வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் முதல் ஆண்டு அறிவித்திருக்கிற 11 கலைக் கல்லூரிகள், இரண்டாம் ஆண்டு அறிவித்த 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், ஆக

மொத்தம் 22 கல்லூரிகளில், 17 கல்லூரிகளுக்கு இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. தங்கள் தொகுதியில் அந்தக் கல்லூரி அமைப்பதற்கான இடம் கோயில் நிருவாகத்தைச் சார்ந்த இடமாக இருப்பதால், அதில் நில மாற்றம் செய்வதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே, கோயில் நிலத்தை நில மாற்றம் செய்வதில் காலதாமதம் ஏற்படும். எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரே வேறு ஏதாவது ஓர் இடத்தைத் தேர்வு செய்தால், உடனடியாக அங்கே கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அப்படி இல்லையெனும் பட்சத்தில், அந்தக் கோயில் நிலத்தை நில மாற்றம் செய்து, கூடிய விரைவில் அங்கே கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Education is production of desirable change in human behaviour என்று உளவியலாளர்கள் சொல்கிறார்கள். அப்படி மனித சமூகத்தில் பல்வேறு மாற்றங்களை நிகழ்த்தக்கூடிய கல்வித் துறையை மேம்படுத்தி, தமிழகத்திலே பட்டி, தொட்டி எங்கும் இருக்கக்கூடிய ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் படிக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு கல்லூரிகளை அமைத்து, தமிழகத்தின் கலைவாணியாக விளங்குகின்ற மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) புனித மலர்ப் பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் ஸ்ரீமுஷ்ணம் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2013 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எவ்வளவு கல்லூரிகள் இருக்கின்றன என்பதை ஏற்கெனவே நான் சொல்லியிருந்தேன். அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கிற கடலூர் மாவட்டத்தில், அரசு உதவி பெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 11 சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் அங்கே செயல்பட்டு கொண்டிருக்கின்றன. அந்த மாவட்டத்தில் ஓட்டல் மேனேஜ்மென்ட் பயிற்றுவிக்கும் கல்லூரியையும் சேர்த்து, மொத்தம் 16 கல்லூரிகள் அங்கே தொடங்கப்பட்டிருக்கின்றன.

ஏற்கெனவே அந்த மாவட்டத்தினுடைய கல்வி நிலையை மேம்படுத்துவதற்காகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டுகூட அந்த மாவட்டத்திற்கு ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஸ்ரீமுஷ்ணத்தில் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, இந்தியாவில் அதிகமான பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் தமிழ்நாட்டில் மட்டும்தான் இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களும் ஏழையெளிய மாணவர்களுடைய கல்வித் தேவையை அறிந்து, அவர்கள் தொழிலைத் தெரிந்துகொள்ளும் வகையில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் வேண்டுமென்ற அடிப்படையிலேதான், சென்ற ஆண்டு 10 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும், இந்த ஆண்டுகூட திருவண்ணாமலை மாவட்டத்திற்கு ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியும் வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 286, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.